**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

**முன்னிலை - திருமதி. பி. வித்யா, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், செஞ்சி,**

**2026 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 - ஆம் நாள்,திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.110/2020**

**CNR.No.TNVP18 – 000285 - 2020**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | காவல் உதவி ஆய்வாளர்<br>செஞ்சி காவல் நிலையம்.<br>குற்ற எண்.417/2019 |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | A1) மாயக்கண்ணன் (வயது - 63)<br>த/பெ. செந்தாமரை,<br>A2) லெனின் (வயது -36),<br>த/பெ. மாயக்கண்ணன்,<br>A3) தமிழ்வாணன் (வயது - 37)<br>த/பெ. காசிநாதன்,<br>A4) சந்தோஷ் (வயது -38)<br>த/பெ. முனியன்,<br>A5) திருமுருகன் (வயது - 43)<br>த/பெ. ராஜ்குமார்<br>மேற்படி நபர்களின் வசிப்பிடம்<br>தையூர் கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | Details of absondance of the accused | --- |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 21.07.2019 |
| 9. | புகார் தேதி (Complaint) | 22.07.2019 |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | A1 முதல் A5 வரையிலான எதிரிகள் மாண்புமிகு விழுப்புரம் அமர்வு |

| | | |
|---|---|---|
| | | நீதிமன்றத்தில் C.M.P.No.4905/2019, 25.07.2019-ம் தேதியன்று முன் பிணையம் பெற்று சென்றுள்ளார்கள். |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | -- |
| 12 | Period of Bail | -- |
| 13 | Commitment | --- |
| 14 | Date of Questioning u/s 228 (or) 240 (or) 246 (or) 251 | 15.06.2022 |
| 15 | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி ( Commencement of Trial) | 06.11.2024 |
| 16 | Date of Examination in Chief and Cross Witnesses | Chief / Cross<br>PW1 06.11.2024 06.11.2024<br>PW2 27.10.2025 27.10.2025<br>PW3 10.12.2025 10.12.2025<br>PW4 17.03.2026 17.03.2026 |
| 17 | விசாரணை முடிக்கப்பட்டது தேதி (Closure of Trial) | 17.03.2026 |
| 18 | Date of examination of accused u/s. 313 Crpc (or) 351 of BNSS | 06.04.2026 |
| 19 | தண்டனை அல்லது உத்தரவு | 06.04.2026 |
| 20 | Details of Victim Compensation Order | --- |
| 21 | Grant of Stay by Superior Courts and their Results. | --- |

| | | |
|---|---|---|
| 22 | எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் | 1 -ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 506 (i) - ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 323 - ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 23 | சட்டப்பிரிவுகள் | இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) |
| 24 | தீர்ப்புரை | 1 -ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 506 (i) - ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 147, 323 - ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்தும், எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) – ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இந்த வழக்கானது கடந்த 28.09.2020 - ம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 06.04.2026-ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 செஞ்சி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.E.வெற்றிச்செல்வன், M.A., B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும், இருதரப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கு :-**

கடந்த 21.07.2019-ம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு தையூர் கிராமத்தில் வேம்பியம்மன் கோவில் தெருவில் 1ம் எதிரியின் வீட்டின் அருகில் நடந்து சென்ற 1 முதல் 3 வரையிலான சாட்சிகளின் முன்விரோதம் காரணமாக மேற்படி இடத்தில் சட்ட விரோதமான கும்பலாக ஒன்று கூடியிருந்த 1 முதல் 5 வரையிலான எதிரிகள் சாட்சிகள்-1 மற்றும் 2 ஆகியோர்களை பார்த்து டேய் தேவடியா பையா நீ எப்படி என் நிலம் எதிரில் உள்ள கம்பத்தில் லைட் கட்டலாம் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அச்சம், அருவறுப்பு ஏற்படும்படி அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்தும் 2 முதல் 5 வரையிலான எதிரியானவர்கள் சாட்சி-3 -யிடம் வீண் பிரச்சனை செய்து கையால் தாக்க இதை கேட்ட சாட்சி-1ஐ பெண் என்றும் பாராமல் 1ம் எதிரி கையால் இடது கன்னத்தில் தம்மிச்சையாக தாக்கியுள்ளார். இதை மறித் சாட்சி-2ஐ 2 முதல் 5 வரையிலான எதிரியானவர்கள் கையாலும் காலாலும் உடம்பிலும் இடது காதிலும் தம்மிச்சையாக தாக்கியுள்ளனர். மேற்படி குற்றங்களுக்காக, 1-ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 354, 506 (i) - ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 323 - ன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக செஞ்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு கு.வி.மு.ச பிரிவு 207- ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டுகள்** :-

வழக்காவணங்களின் அடிப்படையில் 1 -ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 506 (i) - ன் கீழும், 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 323 - ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு

குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளுக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறீரா? அல்லது விசாரணையை வேண்டுகிறீரா? என வினவப்பட்டது. எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தனர்.

எனவே, அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர் படுத்தப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**:-

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.1 (பணக்கார்சி)** இவர் இவ்வழக்கின் சம்பவத்தை பற்றியும், புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.1 (புகார் மனு)** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 (சசிகுமார்)** இவர் இவ்வழக்கில் காயமடைந்தது பற்றி கூறுவார்.

**அ.சா.3 (சசிகுமார்)** இவர் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாவார்.

**அ.சா.4 (குமரேசன் - உதவி ஆய்வாளர்)** இவர் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.2 (முதல் தகவல்**

**அறிக்கை) அ.சா.ஆ.3 (பார்வை மகசர்), அ.சா.ஆ.4 (மாதிரி வரைபடம்), அ.சா.ஆ.5 (அ.சா.2 – ன் காயச்சான்று)** மற்றும் **அ.சா.ஆ.6 (சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்புகள் விசாரிக்கப்பட்ட பின்பு, அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமான பகுதிகள் குறித்து குவி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) – கீழ் வினவிய போது, எதிரிகள் அந்த சாட்சியங்களை மறுத்தார்கள்.

**5. எதிரிகள் தரப்பு வழக்கு**:-

அவர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது எதிரிகள் தரப்பு வழக்கு. ஆனால், எதிரிகள் அவர்கள் தரப்பில் எந்த வித சாட்சியங்களும் இல்லை என குறிப்பிட்டார்கள்.

**6. இருதரப்பு வாதங்கள்** :-

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் அவருடைய வாதத்தில், அ.சா.1 (பணக்காரசி) இவ்வழக்கின் புகார்தாரர் என்றும், அவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 (வரதன்) மற்றும் எதிரி தரப்பில் சம்பவம் குறித்து சமாதானம் ஆகிவிட்டதாக கு.வி.மு.ச 320 பிரிவின் கீழ் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு ஆனது எம்.பி.எண்.3/2025 ஆக எண்ணிடப்பட்டு, அதில் இ.த.ச பிரிவு 294(பி) - ன் படியான குற்றம் இரு தரப்பினர்களிடையே சமரசம் செய்ய முடியாது என்பதால் அம்மனுவானது தள்ளுபடி

செய்யப்பட்டது என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

எதிரிகள் தரப்பில், வாதிடும்போது, குற்றத்தை யார் புரிந்தார் என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் படி நிரூபிக்க தவறியதால், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கமாறு வாதிடப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

**(அ) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபித்துள்ளதா?**

**(ஆ) ஆம், எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

**8. தீர்வு: -**

**(8.1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 (பணக்காரசி) இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். மேற்படி அவர் அளித்த புகார் மனுவின் அடிப்படையில், எதிரிகள் மீது அ.சா.ஆ.2 (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்பட்டுள்ளது.புகார் மனுவிலுள்ள விவரங்களை பொறுத்து அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 6 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், ஒரு நாள் அய்யனார் கோவிலுக்கு லைட் செட்டிங் போட்டிருந்தார் என்றும், அப்போது கோவிலில் மாயக்கண்ணன் என் மகன் சசிக்குமாரிடம் சண்டை போட்டார் என்றும், தன் மகன் வீட்டிற்கும் வந்துவிட்டார் என்றும், பின்னர் மாயக்கண்ணன் வீட்டின் முன்பாக ரோட்டில் சென்றபோது தன் மகன் சசிக்குமாரை மாயக்கண்ணன் அடித்துவிட்டார் என்றும், தான் தடுக்க சென்றபோது தன் தாடையில் மாயக்கண்ணன் அடித்துவிட்டார் என்றும், அப்போது இரவு 8 மணி

இருக்கும் என்றும், அதன் பிறகு என் ஊரைச் சார்ந்த குருநாதன் என்பவரும் வந்து மறித்தபோது குருநாதனை மாயக்கண்ணனும் மாயக்கண்ணனின் மகன் லெனினும் அடித்துவிட்டார்கள் என்றும், பிறகு தாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம் என்றும், இது சம்மந்தமாக செஞ்சி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்ததாகவும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துவிட்டு, மறு விசாரணையின் போது தங்களும் எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.2)** காயமடைந்த மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தங்களுக்கு தெரியும் என்றும், கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் இரவு வேலையில் தங்கள் ஊரில் உள்ள கோவில் திருவிழாவிற்காக விளக்குகள் அமைத்தது சம்பந்தமாக முன் விரோதத்தில் அ.சா.2, அ.சா.3 ஆகிய இருவரும் தங்கள் வீட்டின் அருகே இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வந்து தங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டனர் என்றும், எதிரிகள் தங்களை தாக்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**(8.3)** அ.சா.4 (குமரேசன் - உதவி ஆய்வாளர்) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அல்ல என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி நபர் அவரது சாட்சியத்தில், இவ்வழக்கின் புலன்

விசாரணை அதிகாரி, அ.சா.1 - னிடம் புகார் மனுவினை பெற்று எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும் இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பெற்றது பற்றியும், இவ்வழக்கின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமைந்துள்ளது.

**(8.4)** இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் எதிரிகளுக்கிடையே சமாதானம் ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரிகளும், அ.சா.1, முதல் அ.சா.3 ஆகியோர்கள் உறவினர்கள் என்பது வழக்காவணங்களின் மூலம் தெரிய வருகிறது. அ.சா.4 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்திருந்த போதிலும், பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.4 - ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றத்தை எதிரிகள் தான் செய்தனர் என்று கருத இயலாது. மேலும், வழக்கின் மற்ற சாட்சிகளான பட்டியல் சாட்சிகள் 4 முதல் 7 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. எனவே, அரசு தரப்பு அதன் வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளதை தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக** – 1-ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147, 294(b), 323, 506 (i) - ன் கீழும், 2 முதல் 5

வரையிலான எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 147, 323 - ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்தும், எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) – ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும் எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9. சொத்து பற்றிய ஆணை** :- இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை, ஆகையால் அதை பற்றிய உத்தரவு எதுவுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகிரப்பட்டது.

B VIDHYA
Digitally signed by B VIDHYA
Date: 2026.04.06 19:58:20 +0200

நீதித்துறை நடுவர்,
செஞ்சி

**பின் இணைப்பு**:-

**அரசு தரப்பு சாட்சிகள்**:-

அ.சா.1 பணக்காரசி (புகார்தாரர்)

அ.சா.2 சசிகுமார்

அ.சா.3 குருநாதன்

அ.சா.4 குமரேசன் ( உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:-

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | அ.சா.2 - ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.6 | சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** : - இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :- இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றுபொருள்** : - இல்லை.

B VIDHYA Digitally signed by B VIDHYA Date: 2026.04.06 19:58:11 +0200

**நீதித்துறை நடுவர்,**

**செஞ்சி**

**குறிப்பு-**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.